பொது சன நூலகம்
13 JAN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 29 வியாழக்கிழமை (13 - 01 - 2000) *VALAMPURI* ஒலி: 25

### தமிழ் நாட்டின் முன்னாள் நிதியமைச்சர்

## நாவலர் இரா. நெடுஞ்செழியன் சென்னையில் நேற்று காலமானார்

தமிழ்நாட்டின் மூத்த அரசியல் வாதியும் முன்னாள் அமைச்சரும் நடமாடும் பல்கலைக்கழகம் என அறிஞர் அண்ணாவால் அன்புடன் அழைக்கப்பட்டவருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் நேற்று இரவு 7.25 மணிக்கு சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 79.

நேற்று முன்தினம் நெஞ்சுவலி காரணமாக அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இரா. நெடுஞ்செழியனுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் காலமானார்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரான இவர் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திலும், பின்னர் திராவிடர் கழகத்திலும் தி. மு. க விலும் முக்கிய தலைவராக விளங்கினார். அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, எம். ஜி. ஆர், ஜெயலலிதா, ஆகிய முதல்வர்களின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராக விளங்கிய நெடுஞ்செழியன், சிறந்த எழுத்தாளராகவும் இனிய பேச்சாளராகவும், பத்திரிகையாளர்களும் சட்டமன்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவு சாரதாம்பாளின் பூதவுடல் இன்று கனத்தையில் தகனம் செய்யப்படும்

(கொழும்பு)

புங்குடு தீவில் கடந்த மாதம் 28ம் திகதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட இளம் அந்தணப் பெண் சாரதாம்பாளின் சடலம் இன்று காலை 11 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

களுத்துறை சிறைச் சாலையில் இருக்கும் சாரதாம்பாளின் சகோதரன் சாரதாம்பாளின் இறுதிச் சடங்கில் கலந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று குமார் கொலை விசாரணை

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண ரெரர்ஸ் வீதியில் வைத்து இனந்தெரியாத இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது.

கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி சுமித்திரபால முன்னிலையில் நடைபெறும்.

குமார் பொன்னம்பலத்தின் கொலையுடன் தொடர்புடையவர் எனசந்தேகிக்கப்

(6 ம் பக்கம் பார்க்க)

# ★ நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவின் தெரிவை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி நீதிமன்றில் மனுதாக்கல்!

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்தும்;**

**நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் செல்லுபடியற்றதாக அறிவிக்க கோரியும் ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் காமினி அத்துக்கோறளை நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. கே. என் சொக்ஸி மூலம் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.**

கடந்த மாதம் 21ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெற்ற முறைகேடுகளும், மோசடிகளும், வன்செயல்களும் பரவலாக இடம் பெற்றுள்ளதால், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை செல்லுபடியற்றதாக அறிவிக்க வேண்டுமென்று கூறியும் இத்தேர்தலை ரத்து செய்யுமாறு கோரியும் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தாக்கல் செய்யப் பட்ட மனு அறுபத்து மூன்று பக்கங்களைக்கொண்டுள்ளது,

இம்மனுவில் மாவட்ட ரீதியாக இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் முறைகேடுகள் விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெவில்லை எனவும் 1987 ஆம் ஆண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் ஷெல் தாக்குதல் காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

நேற்றுக் காலை 9.45 மணியளவில் கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் மூவர் காயமடைந்தனர்.

கொழும்புத்துறை ஏ.வி றோட்டைச் சேர்ந்தவர்களான தவராசா தயாபரன் [வயது 14], நடராசா புஸ்ப தேவி [வயது 45], குணசேகரம் முத்துராசா [வயது 40] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (58, 34, 59)

## ஓயாதஅலைகள் 3 நடவடிக்கையில் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போது தமது தரப்பில் ஐவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

★ கடற்புலி இந்திரலதா [மயில்வாகனம் கன்னிகராணி]வீரவேங்கைகளான

★ அருமைமுகிலன் [கோபாலகிருஷ்ணன் சாயிராம் முள்ளியவளை]

★ இளங்கோ [வீரசிங்கம் சாரங்கன் யாழ்ப்பாணம்]

★ அற்புதன் [இரத்தினசிங்கம் ரவிகரன்] திருமலை)

★ தமிழவன் [லட்சுமிகாந்தன் லிங்கேஸ்வரன்] யாழ்ப்பாணம்

## வட - கி மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் அனைத்தும் மூன்று மாதங்களுக்குள் நிரப்பப்படும்

### கல்விச் செயலர் சுந்தரம் டிவகலாலா

(ஏறாவூர்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள்யாவும்அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிரப்பப்பட்டு விடுமென வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் ஒன்பதாயிரமாகக் காணப்பட்ட போதிலும் தற்போது ஐயாயிரத்து 463 வெற்றிடங்கள் மட்டுமே உள்ளதாகவும் அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனங்கள் பல திட்டங்களை நிறைவேற்றின

### அரச அதிபர் கே. சண்முகநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்தபின் பலவெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளும் பலகோடிக் கணக்கான ரூபா பெறுமதியான பல் வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளன. இந்நிலையில் யூ. என். எச். சீ. ஆர் நிறுவனத்தின் உதவியால் 370 லட்சரூபா சுழற்சி நிதியாக தற்போது இருந்து வருவதுடன், இவ்வருடம் சுமார் ஒருகோடி ரூபா

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாளைய வலம்புரியில்

வர்ணக் கலண்டர்

நாளை வெளிவரும் வலம்புரியில் தெய்வ மணம் கமழும் வர்ணக் கலண்டர் உங்கள் கரம் நாடி வருகின்றது.

இன்றே உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

# உள்நாட்டு யுத்தம் தொடரும் வரை கொழும்பில் குண்டுகள் வெடிக்கும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கும்வரை சகல அரசியல் தலைவர்களும் புலிகளின் இலக்குகளாகவே இருப்பார்கள். கொழும்பில் குண்டு வெடிப்புகளும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில்

இந்தமண்ணில் வாழும் ஒவ்வொரு சமூகத்தையும் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமைப்பாடாகும். இதில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், என்ற பாகுபாடு அரசுக்கு ஒரு போதும் இருக்கக்கூடாது. அனைத்து சமூகத்தவரையும் அரவணைத்துச் செயற்படுவதன் மூலமே தொடரும் இன நெருக்கடிகளிலிருந்து சிறிதளவேனும் விடுபட முடியும்.

புலிகளின் நடவடிக்கைகளுக்காக முழுத்தமிழ் சமுதாயத்தின் மீதும் ஆத்திரம் கொள்வது நியாயமற்ற செயலாகும். வன்னியில் படையினரின் பின்னடைவுக்கு படையினர் மீது குற்றம் சுமத்துவது நேர்மையற்ற செயலாகும். யுத்தம் அரசியல் மயப்படுத்தப்பட்டதன் விளைவே இதற்கு முக்கிய காரணம்.

இன்று நாட்டில் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஊடகத்துறையையும் சில ஊடகவியலாளர்களையும் பெயர் குறிப்பிட்டு ஜனாதிபதி கடுமையாக சாடியிருப்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும். ஊடக சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட நாம் எந்தவிதத்திலும் இடம் கொடுக்கமாட்டோம்.

இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு எமது ஒத்துழைப்பைப்பெற உண்மையாக ஜனாதிபதிவிரும்புவாரானால் அடிப்படைத் திட்டங்களை அவர் முன் வைக்கட்டும். அவற்றில் எமக்குத் திருப்தி ஏற்படுமானால் ஒத்துழைப்பு வழங்கத் தயங்கமாட்டோம்.

வெறுமனே பகிரங்கமாகக் கோரிக்கை விடுப்பதும் என் மீது ஐக்கிய தேசிய கட்சி மீதும் வசைபாடுவதுமாக இருந்துகொண்டு மக்களை எவ்வளவு காலம்தான் ஏமாற்ற முடியும் என்றார்.

(க - 14)

# குமார் பொன்னம்பலத்தின் கொலை கடந்த வருடமே திட்டமிடப்பட்டது

## பிரான்ஸ் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகரில் இராமகிருஷ்ணர் வீதியில் வைத்து கடந்த 5-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் காங்கிரஸ் செயலதிபர் குமார் பொன்னம்பலத்தின் மறைவையொட்டி, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அனுப்பிய அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருந்த திகதியில் குளறுபடி இருப்பதாக பிரான்சில் இருந்து வெளியாகும் ஈழமுரசு பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை ஜனாதிபதி அனுப்பிய அனுதாபச் செய்தியில் 6 ஆம் திகதி மே மாதம் 1999 எனத் திகதி இடப்பட்டிருந்ததாவது அமரர் குமார் பொன்னம்பலத்தை கொலை செய்வதற்கான திட்டம் கடந்த வருடமே தீட்டப்பட்டு விட்டதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமரர் குமார் பொன்னம்பலத்தின் மனைவி யோகலஷ்மியுடன் தொடர்பு கொண்டு மேற்படி செய்தியினை உறுதிப்படுத்தி இருப்பதாகவும், அமரரின் மனைவி இந்தத் திகதி மாற்றம் தனது கணவரை அவமதிக்கும் பொருட்டு செய்யப்பட்ட சதி என குற்றம் சாட்டியதுடன், அனுதாபச் செய்தியினை பகிரங்கப்படுத்தும் நோக்கில் கடிதத்தின் பிரதி ஒன்றினை தொலை நகலூடாக ஈழமுரசு பத்திரிகை நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# அமைச்சரின் வருகையை ஒட்டி பண்டார வளையில் தேடுதல்

(கொழும்பு)

தியத்தலாவைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற வைபவம் மொன்றில் கலந்து கொள்வதற்காக, பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, தியத்தலாவைக்கு வரவிருந்ததனால்—

பண்டாரவளைப் பகுதியில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் சனிக்கிழமை அதிகாலை வரை தேடுதல் நடத்திய பொலிஸார் 120 தமிழ் யுவதிகளைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதாகத் தெரியவருகின்றது.

[க-5]

# புத்தாயிரமாண்டில் சமாதானம் மலர வவுனியாவில் பாத யாத்திரை

(வவுனியா)

புத்தாயிரமாம் ஆண்டில் சமாதானத்தை வேண்டி, வவுனியாவில் சமாதானப் பாத யாத்திரை ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

வவுனியா கண்டி வீதியில் உள்ள பௌத்த விகாரையில் ஆரம்பமாகி சிந்தாமணி விநாயகர் ஆலயம், கிறிஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல் ஆகியவை ஊடாக ரம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்தில் முடிவடையவுள்ள இவ் ஊர்வலத்தில் சர்வமதத் தலைவர்கள் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் அரசாங்க அலுவலர் உட்படப் பலர் கலந்து கொள்வர்,

இதேவேளை ஊர்வல முடிவில் நாட்டில் அமைதி, சமாதானம் வேண்டி மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற உள்ளதாக தெரியவருகிறது.

# இன்று கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் இடம்பெற்ற அந்தணப்பெண்சாரதாம்பாள் மீது இடம்பெற்ற பாலியல் வல்லுறவுப் படுகொலையை கண்டித்து மகளிர்அபிவிருந்தி நிலையத்தினர் கண்டனக் கூட்டம் ஒன்றை இன்று நடாத்தவுள்ளனர்.

நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2. 00 மணியளவில் இக்கண்டனக் கூட்டம் இடம்பெறும்.

(க)

**ஆசிய ஆயர்கள்**

# சம்மேளனத் தலைவர் பதவிக்கு தெரியப்பட்ட முதல் இலங்கையர்

(கொழும்பு)

ஆசிய ஆயர்கள் மாநாட்டின் சம்மேளனத் தலைவர் பதவிக்கு முதன் முதலாக இலங்கையரான அதி வணக்கத்திற்குரிய ஒக்ஸ்வேட் ஹோமிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுர மறைமாவட்ட ஆயரும் இலங்கையின் கத்தோலிக்க ஆயர் சம்மேளனத் தலைவருமான ஹோமிஸ், 25 வருடங்களுக்கு முன்னர் ஆசிய ஆயர்கள் மாநாடு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அதனுடன் நெருங்கி பணியாற்றியவர்:

இதேவேளை அவரின் பல்வேறுபட்ட திறமைகள் கரரணமாகவும் இந்தச் சம்மேளனத்தில் நீண்டகாலம் பணியாற்றியதன் காரணமாகவும் ஆசிய ஆயர்கள் மாநாட்டின் சம்மேளனத் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் மூலம் ஆயர் ஹோமிஸ் தேசிய தேவாலயங்களின் பெரும் சொத்தாக விளங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நேர்முகப் பரீட்சை

[நீர்வேலி]

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் வானொலியும் இலத்திரனியலும் இரண்டு வருட கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான கடிதங்கள் விண்ணப்பதாரிகளிற்கு ஏற்கணவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க-19]

# பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணியினர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியுடன் 3 டெஸ்ட் போட்டிகளிலும் 3 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலும் கலந்துகொள்வதற்கு பாகிஸ்தான் செல்லவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் பாகிஸ்தான் சுற்றுலாவில் இலங்கை அணி 40 நாட்கள் தங்கி விளையாடவுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுலாவின் கால அட்டவணை வருமாறு;

பெப்ரவரி 13 – முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டி கராச்சியில்.

பெப்ரவரி 16 - இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டி பைசலாபாத்தில்.

பெப்ரவரி 19 - மூன்றாவது சர்வதேச ஒரு நாள் போட்டி லாகூரில்.

பெப்ரவரி 21-23 மூன்று நாள் போட்டி ராவல்பிண்டி.

பெப்ரவரி 26- மார்ச் 1 - முதலாவது டெஸ்ட் போட்டி ராவல்பிண்டியில்.

மார்ச் 5-9 இரண்டாவது டெஸ்ட் போட்டி பேசாவாரில்.

மார்ச் 13-17 மூன்றாவது டெஸ்ட் போட்டி கராச்சியில்.

மேற்படி இப்போட்டிகளுக்கு இலங்கை அணிக்கு சனத்ஜெயசூரியா தலைமை தாங்குகிறார் இப்போட்டியில் அர்ச்சுனா ரணதுங்க அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். (த-29)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(மந்திகை)

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளகுடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு பருத்தித்துறை சாரதாசேவா ஆச்சிரமத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள வறிய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளை இனங்கண்டு அவர்களுக்கு கொப்பி, பென்சில், பேனாக்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்குகின்றது. (23)


## முக்கிய அறிவித்தல்

### வட்டு கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

எமது காலஞ்சென்ற தந்தையாரும், மேற்படி தேவஸ்தானக்காப்பாளரும். பரம்பரைத் தர்மகத்தாவுமாகிய மாரிமுத்து பொன்னுத்துரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாரணத் திருப்பணிச் சபையின் தலைவரான திரு. நா. ஜெயரஞ்சிதன் என்பவரினால், மல்லாகம் நீதிமன்றத்தில் நம்பிக்கை சொத்து 05 என்ற இலக்கத்தில் எங்கள் இருவருக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முற்றாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் தற்போதைய காப்பாளர்களும் தர்மகர்த்தாக்களும் ஆகிய நாங்கள் மேற்படி புனருத்தாரண திருப்பணிச் சபையை இன்று முதல் கலைத்துவிடுகிறோம். இன்றிலிருந்து கோயிலின் திருப்பணி வேலைகள் தொடர்பாக அன்பளிப்புகள் வழங்கவிருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும், மற்றும் இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேக திகதி வெகு விரைவில் அடியார்களுக்கு எம்மால் அறிவிக்கப்படும் என்பதையும் பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

பொ. நவரத்தினராசா
பொ. இரத்தினராசா
தேவஸ்தான காப்பாளர்களும்
தர்மகர்த்தாக்களும்.

(00066)



## யாழ் லயன்ஸ் கழகம் நடாத்தும்

### இலவச கண் பரிசோதனை

இடம்; யாழ் வைத்திய நிலையம்
166, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

காலம்; 14 - 1 - 2000 வெள்ளிக்கிழமை
நேரம்: நண்பகல் 12முதல் பி.ப. 2 மணிவரை
பரிசோதிப்பவர்: A. ஜெயக்குமார்

P. J. பெர்ணாண்டோ ஸ்தபானம்

சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் தமது பெயரினை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

லயன் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்
தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.

(0004)

# தென்மராட்சியில் சில பாடசாலைகள் இவ் ஆண்டு முதல் மூடப்பட்டன

(தென்மராட்சி)

தென்மராட்சியில் பல வருடங்களாக அரசினால் நடாத்தப்பட்டு வந்த மந்துவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வரணி ஸ்தான வித்தியாலயம், போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளும் இவ் ஆண்டு முதல் தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் மூடப்பட்டு விட்டன.

மந்துவில் அ. த. க. பாடசாலை மந்துவில் றோ. க. த. க. பாடசாலையுடனும், வரணி ஸ்தான வித்தியாலயம் இடைக்குறிச்சிசைவப்பிரகாச வித்தியாலயத்துடனும், போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துடனும் இம்மாதம் முதல் இணைக்கப்பட்டுள்ளன.

மூடப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்கள் இணைப்புப் பாடசாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், தளபாடங்களும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் மூடப்பட்டுள்ள மூன்று பாடசாலைகளினது கட்டடங்களை எவ்வகையில் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றி கல்வித் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை இக்கட்டடங்களில் முன்பள்ளிகளை நடாத்தக்கூடிய ஏதுநிலை இருக்குமா என்பது பற்றி அவ்வப்பகுதி கிராம சேவையாளர்கள் தென்மராட்சி பிரதேச செயலருடன் ஆலோசித்து வருவதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் மூலம் அறியப்படுகின்றது. (க)

# ஜயலத் ஜயவர்த்தனா பாராளுமன்றில் அங்கம் வகிப்பதற்கு தகுதியானவரா?

## பிரதி அமைச்சர் கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின்தலைவர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வனுடன் இருவாரங்களுக்கு ஒருமுறை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடிவரும் ஜயவர்த்தனா எம்.பிஇச்சபையில்இருப்பதற்கு அனுமதி கொடுக்கலாமா எனஅமைச்சர்ஒருவரும் பிரதிஅமைச்சர்ஒருவரும்அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாட்டின் பிரிவினைக்கு ஆதரவாகச் செயற்பட மாட்டோம் என்று சத்தியப்பிரமாணம்எடுத்து இச்சபைக்குள்வரும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எவ்வாறு பிரிவினை கோரும் பயங்கரவாதஅமைப்புடன் தொடர்பு கொண்டிருக்கலாம் எனக் கேட்டார்.

இந்த விவாதம் சூடு பிடித்ததைத்தொடர்ந்து சபையில் இரு தரப்பினருக்குமிடையே வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. சபை அலுவல்களை முன்னெடுக்க முடியாமலிருந்ததால் 10 நிமிடங்களுக்கு சபையை பிரதி சபாநாயகர் ஒத்திவைத்தார்.

இது ஒழுங்குப் பிரச்சினைக்குரிய விடயமல்ல. எம். பி. மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், பதில் பிரேரணையொன்றை சமர்ப்பிக்க முடியுமென்று பிரதி சபாநாயகர் கூறினார்.

மீண்டும் சபையில் கூச்சல் எழுந்ததனால் 12. 10 மணியளவில் பிரதிசபாநாயகர் சபை அலுவல்களை அரை மணித்தியாலத்திற்கு இடை நிறுத்தி வைத்தார்.

ஒருமணியளவில் சபை மீண்டும் கூடியது. தரமற்ற வார்த்தைகள் இரு தரப்பினரிடமிருந்தும் சரமாரியாக பிரயோகிக்கப்பட்டன.

(க-5)

### வடக்கு - கிழக்கு மாகாணத்தில்

# ஆசிரியர் இடமாற்றம் அனைத்தையும் இடமாற்ற சபையே மேற்கொள்ளும்

(ஏறாவூர்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் இடமாற்ற சபையினால் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டுமென வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கண்டிப்பான உத்தரவொன்றை விடுத்துள்ளது.

இதற்கு அமைவாக ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆசிரியர் இடமாற்ற சபை உடன்அமைக்கப்பட வேண்டுமென வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமைக்கப்படும் ஆசிரியர் இடமாற்ற சபையில் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இடம் பெறுவர். (ந)

# சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

512 பிரிகேட் பிரிவைச் சேர்ந்த செனரத் சமித்த என்ற சிப்பாய் தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வலது கையில் காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-34)

# கோழித் திருட்டு அதிகரிப்பு

(திருநெல்வேலி)

யாழ். குடா நாட்டில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற வேளையில் பாண்டியன் தாழ்வுப் பகுதியில் கோழித் திருட்டு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

நேற்று முன்தினம் அப்பகுதியில் புகுந்த திருட்டுக் கோஸ்டியினர் அப்பகுதி வீடுகளில் பரவலாக கோழிகளை திருடிச் சென்றனர் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (க-76)

# ஊர்காவற்றுறை ச. ச. நிலையங்களுக்கு மானிய உதவு தொகை வழங்கப்படும்

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள 3? சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டிற்கான மானிய உதவு தொகை வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர் திரு ந. மனோகரன் தெரிவித்தார்.

''ஏ'' தரத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு ரூபா ஆயிரமும் ''பி'' தரத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு ரூபா ஐந்நூறும் வழங்கப்படவுள்ளதாகவும், உரிய சனசமூக நிலையங்கள் பிரதேசசபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்த 12 வருடங்களாக இப்பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு எதுவித மானிய உதவுதொகையும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. [க]

# நிரந்தரமாக்கப்படாமை குறித்து தற்காலிக ஊழியர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கடமையாற்றும்தற்காலிக ஊழியர்கள் பலர் தாம் நிரந்தரமாக்கப்படாதது குறித்து பெரிதும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அரச, மற்றும் அதிகார சபைகளால் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவரும் நிரந்தரமாக்குவதற்குரிய சுற்று நிருபம் அனுப்பப்பட்டும் கூட இதுவரையில் எதுவித முயற்சிகளையும் மேற்கொள்ளாது சிரேஷ்ட அதிகாரிகள் காலத்தை கடத்துவதாகவும் தற்காலிக ஊழியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வீதி, அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் யாழ்ப்பாணம், பளைப் பிரிவுகளில் மட்டும் 10 இற்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

[க-59]

# திருத்த வேலைகள்

கொடிகாமம் பொதுச் சந்தைக் கட்டட வேலைகள் நேர்த்தியான முறையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

மழை நீர் தாங்கி, நீர் பாயும் வாய்க்கால், மதில் அமைப்பு, குழாய் பொருத்து வேலைகள், பெயின்ரிங் வேலைகள் என்பன நீண்ட நாளாகநடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-28)

# ஐ. தே. க. மட்டு அமைப்பாளர் அப்துல்கையூம் ஈ. பி. டி. பியில் இணைவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் கொத்தணி அமைப்பாளர் ஏ. எல். அப்துல்கையூம் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி(ஈ.பி.டி.பி) யில் இணைந்துள்ளார். ஈ.பி.டி.பியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை கொழும்பில் சந்தித்தமேற்படி அமைப்பாளர் தலைமையிலான குழுவினர் ஈ.பி.டி.பியில் இணைந்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு ஆதரவாகப் பணியாற்றிய தாங்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் மாவட்ட ரீதியில் ஈ.பி.டி.பி க்கு ஆத்ரவாகச் செயற்படவுள்ளதாக அப்துல்கையூம் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்துமா? எனக் கேட்ட போது அது பற்றி நாம் எதுவுமே தலைமைத்துவத்துடன்பேசவில்லை என்றார். [க-60]

### யாழ். நகரில்

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் கண்காட்சி

மிலேனிய சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு – கிழக்கு மாகாண சபை தொழிற்துறை திணைக்களம் மாவட்ட மட்டத்தில் யாழ். நகரில் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளது.

யாழ். மக்களிற்கு உள்ளூர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தி உற்பத்தியாளரை ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இக்கண்காட்சியில் நெசவு, தும்பு, மரவேலை, பன்னவேலை, தையல், தோல், மட்பாண்டம், உணவு, விவசாய, அலங்காரப் பொருள்கள், இரும்பு வேலைப்பொருள், சிற்ப வேலைகள் போன்றவை உள்ளடங்கலாக அனைத்து உள்ளூர் உற்பத்தி கைத்தொழில் பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள தனியார், கூட்டுறவு பொது அமைப்புக்களை தங்கள் பெயர், உற்பத்திப் பொருள் பற்றிய விடையங்களை யாழ். கச்சேரியில் மேல்மாடி புள்ளிவிபரக் கிளைக்கு அருகில் உள்ள தொழில்துறை திணைக்கள அலுவலகத்தில் மாவட்ட தொழில்துறை அலுவலரை திங்கள், புதன், சனி, நாட்களில் காலையில் சந்தித்து பதிவு செய்து கொள்வதுடன் மேலதிக விபரங்களையும் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (க)

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் அண்மையில்புதிதாக நியமனம் பெற்ற எழுதுவினைஞர்களுக்கான புதுமுகப் பயிற்சி நெறி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி நெறி 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெறவுள்ளது.

முதலாவது பயிற்சி 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையும் இரண்டாவது பயிற்சி 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும் மூன்றாம் நாள் பயிற்சி 31 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரையும் நான்காவது பயிற்சி 7ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியை வடக்குக் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்கள ஏற்பாட்டில் நடாத்தப்படும்.

# பால்மா வகைகள் தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பைக்கற் பால்மா, மீன்ரின் போன்ற சில பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அங்கர், குழந்தைகளுக்கான பால்மா (S.M.A) என்பவற்றுக்கும் இந் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க-17)

# அல்லைப்பிட்டி,மண்கும்பான்பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

தீவுப்பகுதிக்கான தரை மார்க்க போக்குவரத்து நடைபெறுகின்ற போதிலும் அல்லைப்பிட்டி மண்கும்பான் ஊடான பஸ் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை, அங்கு பாடசாலை, அஞ்சல் அலுவலகம், நூலகம், மற்றும் தனியார் அரசு அலுவலகங்கள் இயங்குகின்றபோதிலும் அப்பகுதிக்கான பஸ் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் அரசு தனியார் நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுடன் அவ்வூர் மக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகின்றனர். இது தொடர்பாக வட.பிராந்திய போக்குவரத்து சபையினரிடம் முறையிட்ட போதும் அதற்கான நடவடிக்கை எதனையும் அவர்கள் மேற்கொள்ளாததை இட்டு அவ்வூர்மக்களும் அலுவலர்களும் விரக்தி அடைந்துள்ளனர்.

(க-76)

# குண்டுகள் செயலிழப்பு

[பருத்தித்துறை)

பருத்தித்துறை படை முகாமில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.45 மணியளவில் வெடிக்காத நிலையிலிருந்த மூன்று குண்டுகள் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகக்கூறப்படுகின்றது.

முன் அறிவித்தல் ஏதுமின்றி தொடர்ந்து பெரும் சத்தத்துடன் இம் மூன்று குண்டுகளும் வெடிக்க வைக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டதைக் காணக் கூடியதாகஇருந்தது.

(ந-11)

# கோண்டாவிலில் திருட்டுக்கள் வெகுவாக அதிகரிக்கின்றன

(அச்சுவேலி)

கோண்டாவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு வேளையில் இரண்டு வீடுகளில் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி ஆர். சிவசோதி என்பவருடைய 7 பவுண் தாலிக்கொடியும் 2 பவுண் தங்கச் சங்கிலியும் திருடரால் அபகரித்துச் செல்லப்பட்டது.

இதே தினத்தில் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில், திருடர்களின் திருட்டு முயற்சி பலிக்காததால் தப்பி ஓடியுள்ளனர். கோண்டாவிலில்வெவ்வேறு இடங்களில் சிறிய திருட்டுச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

(க-57-5)

# நிவாரணம் வழங்கல்

(திருநெல்வேலி)

யாழ்.கரையோரக்கிராமங்களில் இருந்து அண்மைக் கால போர் நிலவரம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களிற்கு இருவாரங்களுக்கான நிவாரணப் பொருட்கள் நேற்று முதல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கால் வழங்கப்படுகிது.

முள்ளி அரியாலை, பாசையூர் குருநகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கே மேற்படி நிவாரணம் வழங்கப்படுகிறது.

## க. பொ. த. உயர்தர வகுப்பிற்கான

# பொது சாதாரண பரீட்சைக்குரிய வினாக்கள்

2000 ஆண்டும் அதற்குப் பின்னரும் உயர் தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதி கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் இணைந்து வெளியிட்ட வினாக்கள் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

**2.23 பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் ஒப்புமைகளை அல்லது ஒத்த தகவல்களை ஒத்த சந்தர்ப்பங்களில் இனங்காணல்**

இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் சமர்ப்பிக்கப்படும் அல்லது சேகரிக்கப்படும் தகவல்களிடையே அல்லது காரணிகளிடையே ஒத்தவையையும் ஒவ்வாதவையையும் தெரிந்து எடுத்துத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு ஒருவருக்கு உள்ள ஆற்றலை இனங்காணல். இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் எடுத்துரைக்கப்படும் அல்லது சேகரிக்கப்படும் தகவல்களிடையே சில மாத்திரம் பிரச்சினையைத் தீர்க்கப் பொருத்தமாக இருக்கும் அதேவேளை மற்றைய தகவல்கள் பிரச்சினையைத்தீர்க்கப் பொருத்தமானவையாக இருக்கமாட்டா.

**உதாரணம்**

இல. 15 இலும், 16 இலும்உள்ள ஒவ்வொரு வினாவிலும் ஐந்துசோடி சொற்கள் தரப்பட்டிருக்கும் அதேவேளை அவற்றில் நான்கிற்கிடையே பொதுத் தொடர்புடைமை உண்டு. ஒரு சோடியில் அத்தகைய தொடர்புடைமை காணப்படமாட்டாது. அச்சோடியைத் தெரிந்தெடுக்க.

[15] (1) கனவளவு : லீற்றர்
(2) காலம் : செக்கன்
(3) நீளம் : மீற்றர்
(4) அமுக்கம் : பாரமானி
(5) நிறை : கிராம்

[16] (1) பயமற்ற : பயப்படும்
(2) அலங்காரம் : அழகு
(3) தெளிவு : சிக்கல்
(4) தேசிய : அந்நிய
(5) உத்தம : தாழ்ந்த

**2:3 நியாயிக்கும் ஆற்றல்**

ஒருவர் பிரச்சினை தீர்ப்பதில் ஈடுபடும்போது தர்க்கரீதியாகப் பொருத்தமான பொருத்தமற்ற தகவல்களையும் காரணிகளையும் வேறுபிரித்து இனங்காணுதல் வேண்டும். பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தர்க்கரீதியான சிந்தனை இன்றியமையாத ஆற்றலாக இருக்கின்றபோதிலும் அதனைப் புறம்பான, விசேட ஆற்றலாகக் கருதி அளவிடுவதற்காகப் பொதுச் சாதாரணப் பரீட்சையின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நியாயிக்கும் ஆற்றலை நான்கு வெவ்வேறு விதங்களில் பரீட்சிப்பதற்காக இப் பரீட்சையில் வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விதங்கள் பின்வருமாறு:-

2:31 பகுத்தாய்வு நியாயித்தல்
2:32 முறைமை நியாயித்தல்
2:33 எண்முறை நியாயித்தல்
2:34 வெளி நியாயித்தல்

**2:31 பகுத்தாய்வு நியாயித்தல்**

தனியாட்கள், இடங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்புடைமைகளை விவரிக்கும் வாசகங்கள், விதிகள், நிலைமைகள் ஆகியவற்றில் உள்ள தகவல்களையும் சாடைக் குறிப்புக்களையும் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் பகுத்தாய்வு நியாயிக்கும் ஆற்றல் எனப்படும். இங்கு தகவல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு முடிவுக்கு வரும் ஆற்றலே பரீட்சிக்கப்படுகின்றது.

**உதாரணம்**

17 ஆம் 18 ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டன.

லீலா, நீலா, கலா, மீரா, மாலா, மீனா, கீதா என்ற ஏழு எழுதுநர்கள வட்டமேசை ஒன்றைச் சுற்றி இருந்து கொண்டு நண்பகலுணவை உண்கின்றனர்.

மீனா கீதாவிற்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இருக்கின்றார்.

நீலா கலாவுக்கு கிட்டவன்றி மீனாவிற்குக் கிட்ட இருக்கின்றார்

கலாவிற்கு கிட்ட இருக்கும் மாலா கீதாவிற்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கின்றார்.

மீரா லீலாவிற்கும் கலாவிற்கும்இடையே இருக்கின்றார்.

(17) கீதாவிற்குக் கிட்ட இடப்பக்கத்தில் இருப்பவர் யார்?

(1) மீரா (2) லீலா (3) கலா (4) மீனா (5) மாலா

(18) நீலாவின் இடப்பக்கத்தில் நான்காவதாக இருப்பவர் யார்?

(1) லீலா (2) மீனா (3) கலா (4) மாலா (5) கீதா

**உதாரணம்**

19 ஆம், 20 ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டன. ஒவ்வொரு வினாவிலும் ஒரு யோசனையும் இரு கொள்கைகளும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரச்சனை தொடர்பாகவும்.

கொள்கை இல. I மாத்திரம் யோசனையை உறுதிப்படுத்துமெனின் A யையும்

கொள்கை இல. I மாத்திரம் யோசனையை உறுதிப்படுத்துமெனின் B யையும்

கொள்கை இல. I கொள்கை இல. II ஆகிய இரண்டும் தனித்தனியாக யோசனையை உறுதிப்படுத்துமெனின் C யையும்

கொள்கை I, கொள்கை II ஆகிய இரண்டும் ஒன்றாகத் தொடர்புபடுத்தப்படும்போது யோசனையை உறுதிப்படுத்துமெனின் D யையும்

கொள்கை I, கொள்கை I ஆகிய இரண்டில் எதுவும் யோசனையை உறுதிப்படுத்தாவிடின் E யையும்

குறித்து நிற்கும் இலக்கத்தைத் தெரிந்தெடுக்க

19. யோசனை – பலாமரம் வெட்டுதல் முற்றாகத் தடை செய்யப்படுதல் வேண்டும்.

கொள்கை I – அதன் மூலம் மர வியாபாரிகள் அதிக அளவு பணம் சம்பாதிக்கின்றனர்.

கொள்கை II- பலா அவ்வளவு பெறுமதியான மர வகையன்று.

(1) A (2) B (3) C (4) D (5) E

20, யோசனை - ஒருவர் கடத்திச் செல்லப்படும்போது அவரை விடுவிப்பதற்குக் கடத்திச் சென்றவருடைய நிபந்தனைகளுக்கு உடன்படுதல் அல்லது கடத்திச் சென்றவருக்குக் கப்பம் கொடுத்தல் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நடவடிக்கையாகும்.

கொள்கை I -ஆபத்திற்கு உட்பட்டவர்களை எவ்விதத்திலும் காப்பாற்றுதல் வேண்டும்.

கொள்கை II - அது அவர்களின் தீய செயல்களை மேலும் ஊக்குவிக்கும்.

(1) A (2) B (3) C (4) D (5) E

**2. 32 முறைமை நியாயித்தல்**

முறைமை நியாயித்தலின் கீழ்ப் பின்வரும் ஆற்றல்கள் பரீட்சிக்கப்படும்.

**● பிழையான, சரியான தர்க்கிப்புகளை இனங்காணல்**

நியாயித்தலின் போது தரப்படும் தர்க்கங்களுக்கிடையே சில பிழையானவையாகவும் சில சரியானவையாகவும் இருக்கலாம். தர்க்கங்களின் பிழையையும் செம்மையையும் இனங்காணும் ஆற்றல் இதன் கீழ் அளவிடப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தரப்படும் தகவல்களை மாத்திரம் கருதிப் பார்த்துச் சரியான முடிவுகளுக்கு வருதல் எதிர்பார்க்கப்படும்.

**உதாரணம்**

21. பின்வரும் சிறு பந்தியுடன் அதில் உள்ள கருத்தை அடிப்படையாய்க் கொண்டு உருவாக்கப்பட்ட இரு கூற்றுகள் A, B எனத் தரப்பட்டுள்ளன அவ்விரு கூற்றுகள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள விடைகளில் திருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.

பந்தி; மனிதனிடமிருந்து தனது தேவைகளைத் திருப்தி செய்யும் ஆசையைப் பிரிக்க முடியாது. ஆகவே மனிதனின் வாழ்க்கை தேவைகளைத் திருப்தி செய்யும் முயற்சியிலேயே தங்கியிருக்கின்றது. இதற்குக் காரணம் மனித வாழ்க்கை தேவைகள் நிறைந்ததாக இருக்கின்றமையாகும்.

கூற்றுகள்: A - மனிதன் வாஞ்சைமிக்கவன்

B - வாழ்க்கை பொருள்களின் நுகர்ச்சியிலே தங்கியுள்ளது.

(1) A மெய், B பொய்
(2) B மெய், A பொய்
(3) A மெய், B மெய்
(4) A பொய், B பொய்
(5) A, B ஆகிய இரண்டும் ஒருமிக்கக் கருதப்படும்போது மெய்யானவை.

**எடுகோளை இனங்காணல்**

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் தனியாட்கள் எடுகோள்களை அடிப்படையாய்க் கொண்டே சில விடயங்களைச் செய்வர். தனியாட்கள் அறிந்தோ, அறியாமலோ பல்வேறு எடுகோள்களை மனத்தில் வைத்துக்கொண்டு நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு செயல்களில் ஈடுபடுவதைப் பற்றிச் சிறிதளவில் சிந்தித்துப் பார்க்கும் போது இதனை விளங்கிக் கொள்ளலாம். எளிய உதாரணம் ஒன்றைப் பார்ப்போம் காலையில் குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லத் தயாராகும் பிள்ளை எடுகோள்கள் பலவற்றை உருவாக்கிக்கொண்டு செயற்படுகின்றது. பேருந்து வான் நேரத்திற்கு வரும் பாதையில் தடையிருக்காது. பேருந்து வான் நேரத்திற்கு உரிய இடத்திற்குச் செல்லும். இவை போன்ற பல எடுகோள்கள் அவன் அறியாமலே அவனுடைய மனத்தில் எழலாம். அத்தகைய எடுகோள்களை இனங்காணும் ஆற்றல் ஒருவரிடம் இருக்கின்றதா என்பதைப் பின்வரும் வினாக்களின் மூலம் அளவிடலாம்.

**உதாரணம்**

22. விலங்குகளின் உடல் வளர்ச்சியில் காலநிலை செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பதைக் காண்பதற்கான ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானி ஒருவர் ஒரே பெண் நாயின் இரு குட்டிகளில் ஒன்றைக் குளிர்மிகு நுவரெலியாவில் உள்ள வீடு ஒன்றிலும் மற்றைய குட்டியை வெப்பமிகு கொழும்பு நகரில் உள்ள வீடு ஒன்றிலும் வளர்ப்பதற்கு ஒழுங்கு செய்து அவற்றின் வளர்ச்சியில் அவை வாழும் பிரதேசத்தின் காலநிலை விசேடமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்குத் திட்டமிட்டார் ஆய்வு சில எடுகோள்களை அடிப்படையாய் கொண்டு திட்டமிடப்பட்டது. பின்வருவனவற்றில் எது ஆய்வுக்குப் பொருத்தமற்ற எடுகோளாகும்.

(1) இரு வீடுகளிலும் இருப்பவர்களிடமிருந்து இரு நாய்க்குட்டிகளுக்கும் ஒத்த அன்பும் கவனமும் கிடைத்தல் வேண்டும்.

(2) இரு வீடுகளிலும் இருக்கும் அறைகளின் எண்ணிக்கையும் இடவசதியும் சமமாக இருத்தல் வேண்டும்.

(3) இரு நாய்க்குட்டிகளும் ஒத்த உடனலத்தை உடையனவாக இருத்தல் வேண்டும்.

(4) இரு நாய்க்குட்டிகளுக்கும் ஒரு வேளைக்குக் கிடைக்கும் கலோரியின் அளவு சமமாக இருத்தல் வேண்டும்.

(5) இரு நாய்க்குட்டிகளுக்கும் தினமும் கிடைக்கும் அப்பியாசத்தின் அளவு சமமாக இருத்தல் வேண்டும்.

(தொடரும்)

## இராசி பலன்

13.01.2000 வியாழக்கிழமை (தமிழுக்கு மார்கழி 29)

ஸப்தமி அதிகாலை 4.23 வரை; உத்தரட்டாதி மாலை 4.43 வரை, சித்த யோகம், இராகு காலம் பகல் 2.34 முதல் 4.01 வரை, சுப நேரம் காலை 8.35 முதல் 10.05 வரை.

**மேடம்**
தொழில் ஏமாற்றம், உறவினர் குற்றம், மனச்சுமை.

**இடபம்**
வாய்ப்பு நழுவுதல், காரிய தாமதம், அலைச்சல்,

**மிதுனம்**
தியாக சிந்தை, பெற்றோர் உதவி, திருமணயோகம்.

**கடகம்**
அகங்காரம், துணை போதல், ஸ்தான மாற்றம்.

**சிங்கம்**
குடும்பக் கவலை, தொழில் பாதிப்பு, உடல் உபாதை.

**கன்னி**
பெரியோர் அறிவுரை, காரிய வெற்றி, பணவரவு,

**துலாம்**
மறைமுக நன்மை, கல்வியால் பெருமை, நண்பர் வெகுமதி.

**விருச்சிகம்**
தவறான போக்கு, மனச் சஞ்சலம், பணச் செலவு.

**தனுசு**
முட்டி மோதல், குடும்பக் குழப்பம், அநாவசியத் தொல்லை,

**மகரம்**
நினைத்தது நடக்கும், பதவிச் சிறப்பு, உறவினர் உதவி.

**கும்பம்**
குற்ற உணர்வு, சகோதரர் பகை, கடன் படல்.

**மீனம்**
சமயோசிதம், தாய்வழி நினைவு, பயண வெற்றி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா.

## நிதிதிரட்டும் பணியில் அறவழிக்குழு

அறவழிப் போராட்டக் குழுவின் செயற்பாடுகளின் அபிவிருத்திக்கான நிறுவனம் மாவட்ட மட்டத்தில் நிதி திரட்டும் நடவடிக்கைகளை அண்மையில் ஆரம்பித்துள்ளது

'புத்தாயிரம் ஆண்டில் அறவழியின் செயல்பாட்டுக்கு உதவுங்கள்' என்னும் தலைப்பில்ஆயிரம், ஐந்நூறு, இருநூற்றி ஐம்பது மற்றும் நூறு ரூபா பெறுமதியான அன்பளிப்பு டிக்கெட்டுக்களை அறவழி நிர்வாகிகளும், தொண்டர்களும் விற்பனை செய்து வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு உபகரணம் வழங்கல்

உலக உணவு விவசாய ஸ்தாபனம் 200 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்க முன்வந்துள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 65 பேருக்கும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 85 பேருக்கும் மருதன்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 50 பேருக்கும் வாளி, மண்வெட்டி, முள்ளுக்கரண்டி அரிவாள், கத்தி ஆகிய உபகரணங்கள் வழங்க உள்ளது.

கரவெட்டி, பருத்தித்துறையைச்சேர்ந்தவர்களுக்கு இன்று 10 மணிக்கு புலோலி கமநல சேவை நிலயத்திலும் மருதன்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்று அம்மன் கமநல சேவை நிலையத்தில காலை 10 மணிக்கு வழங்கப்பட உள்ளது. (க-23)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பல்குழுவும் பாழ் செய்யும்
உட்பகையும்
வேந்தலைக்கும் கொல்
குறும்பும் இல்லது நாடு.

- குறள்

# வலம்புரி

## அறப்பாடசாலைகள்

மறம் தனது மரணப்பிடியை இறுக்கிக் கொண்டிருக்கும் வேளை இது. வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல் மக்கள் வேதனை அனுபவிக்கும் காலமும் இதுவே. இந்த இக்கட்டான-இன்னல் தோய்ந்த காலத்தில் மறம் தலைக் காட்டக் காரணம் என்ன என்று எண்ணும் இதயங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

அறச் சிந்தனைகள் அறவே அகன்ற காரணத்தால் உயிரின் விலை பூச்சியமாகிவிட்டது. மறத்தின் விலை முடிவிலியாகி முனைப்பொடு நிற்கிறது. கொலை, கொள்ளை, மலிந்து மனித சமூகம் நலிந்துள்ளது. இந்த வேளையிற்தான் அறப் பாடசாலைகள் முளைவிடுகின்றன. இன்றைய பிஞ்சுகள், நாளைய ஆட்சியின் காவலர்கள். அவர்கள் செறுபகை போக்கி சிந்தை திருந்தின் நாடு நயப்பொடு கேடிலாது விளங்குமன்றோ.

அன்றைய காலங்களில் கோயிலும் இத்தகைய பண்பைவளர்த்தது. இல்லமும் அறப்பண்பில் மிளிர்ந்து முதிர்ந்தது. கால வெள்ளத்தை நாகரிக மெனும் போலிப் போர்வையால் சமயஉண்மைகள் பேணப்படாது மனிதம்செத்துப்போனது மனிதப்பண்பு- மக்களை மக்களாக நேசிக்கும் அன்பு என்பன கிளை கொள்ளவேண்டும். அப்போது தான் வேற்றுமையுணர்வு வேரோடுசாயும்.

புரையேறிப்போன பொல்லாப்பகையும்-புரிந்துணர்விலாச்சாபக்கேடும் நாட்டின் இதயத்தைக் குத்துகின்றன. சமாதானத்தின் சமநிலையைக் குலைக்கின்றன. குரோதத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்கின்றன அதன்வழி இரத்த ஆறும் கண்ணீரும் மண்ணைநனைக்கின்றன. இவற்றிற்கு முற்றுப் புள்ளி வைப்பதுபோல் முளைவிடும் அறப்பாடசாலைகள் பல்கிப்பெருக வேண்டும் -பயன் பல தர வேண்டும்- பாலகர் தம் பிஞ்சு உள்ளங்களைதெம்பாகஅறக்கருத்துக்களால் நிரப்பவேண்டும். பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்பும் இல்லாத நாட்டைப் பரிணமிக்கச்செய்ய வேண்டும். வாழ்வு மலர அறம் தழைப்பதாக. தாழ்வு அகல அறச்சிந்தனைகள் மேலோங்குவதாக.

அன்புடன் ஆசிரியர்

# காணாமல் போனவர் குறித்த விசாரணை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி

### எம். சி. எம். இக்பால் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிலைமைகளினால் காணால்போனோர் குறித்து விசாரிப்பதற்கென விசேடமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எம். சி. எம் இக்பால் தெரிவித்துள்ளார்.

இவ் ஆணைக்குழுவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு வெளி இருந்து எல்லாமாக 10136 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கப்பெற்ற 457 முறைப்பாடுகளில் பல ஒரே நபர் பற்றியதாக இருந்ததால் அவற்றுள் 373 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆணைக்குழுவின் விசாரணைக்காலம் 88 ம் ஆண்டு ஜனவரி முதல் 96 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியில் காணாமல்போனோர்குறித்து கிடைத்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை 90 ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர் பற்றியவையாகும்.

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 373 முறைப்பாட்டாளர்களினதும் முகவரிகளை ஊர்ஜிதம்செய்து அவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ஆணைக்குழு கடிதங்களை அனுப்பிவைத்த போதும் சிலர் தமது சொந்த இடங்களில் இல்லாத காரணத்தால் அவற்றை பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

ஊர்காவற்துறை, பருத்தித்துறை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த ஆணைக்குழு இவ் விசாரணைகளை மேற்கொண்டது. இவ் விசாரணைகளின்போது சுமார் 16 பேர் தமக்குக் கடிதங்கள் கிடைக்காமையாலேயே விசாரணைக்கு சமுகமளித்ததாகவும் 16பேர் அழைப்பு விடுத்த போதும் சமுகமளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணை குறித்த அறிக்கையை ஆணைக்குழு மிகவிரைவில்ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு விசாரணைக்காலத்தை பூர்த்தி செய்து கொழும்பு திரும்பிய பின்னரும் சிலர்தமது முறைப்பாடுகளை அனுப்பிவைத்துள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட மேலதிக முறைப்பாடுகள் குறித்து தமது அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்படாத போதிலும் அவை குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# வீதிசேதம் போக்குவரத்து பாதிப்பு

(அச்சுவேலி)

பத்தமேனி பிள்ளையார் கோயில் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது காணப்படுவதனால் போக்குவரத்திற்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

திருத்த வேலைக்கென கடந்த சில மாதங்களிற்கு முன்னர் வீதி ஓரத்தில் கற்கள் குவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மாரிகாலத்தில் அவ் வீதியில் உள்ள குழிகளில் மழை நீர் தேங்கி நிற்பதனால் மக்கள் பிரயாணத்தின் போது அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

# 45 நாட்களாக தொடரும் மட்டு.இசை கல்லூரி மாணவர் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பமாகி நேற்றுடன் 45 நாட்கள் பூர்த்தியடைந்துவிட்டன. கடந்த மாதம் 24ஆம் திகதி வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதன் மூலம்இப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

கிழக்குப்பல்கலைக் கழகத்துடன் எமது இசைநடனக் கல்லூரியை இணைக்க வேண்டுமென்றே மேற்படி போராட்டம் நடாத்தப் பட்டு வருகின்றது.

கோரிக்கை நிறை வேறும் வரை போராட்டம் தொடருமென மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

(க-60)

# பிலிப்பைன்ஸ் அதிபரை கவிழ்க்க மணிலாவில் கடற்படை குவிப்பு!

[மணிலா]

மணிலாவில் 500 கடற்படை வீரர்கள் குவிக்கப்பட்டிருப்பது பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் ஜெஸ்ரானாவை பதவி கவிழ்ப்பதற்காகவே என்று மணிலாவில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று குற்றம் சுமத்தி இருக்கிறது.

அப்பத்திரிகை மேலும்தெரிவிக்கையில் மணிலாவில் கடற்படை வீரர்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருப்பதற்கும் அரசியல் புரட்சி ஏற்படப் போவதாக உலவி வருகின்ற வதந்திக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என பிலிப்பைன்ஸ் தற்காப்பு அமைச்சர் அறோட்டோ மெக்காடோ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை தொடர்ந்தும் நிலைநாட்டும் முயற்சியாகவும், சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டுள்ள பொலிசாருக்கு உதவும் பொருட்டுமே மணிலாவில் கடற்படையினர் சேவையில் ஈடுபடுத்தபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(09)

# மிலேனியம் குழந்தைக்கு சத்திரசிகிச்சை

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் பிறந்த முதலாவது மிலேனியம் குழந்தைக்குநடத்தப்பட்ட இருதய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது.

இப்பொழுது குழந்தை பூரணகுணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை இரண்டாயிரமாம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அதிகாலை 12.01-ற்கு ஒக்லண்ட் நகரில் பிறந்த ஆண்குழந்தை இதய சத்திர சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூரில் புதிய முறைகளில் கைதிகள் பராமரிக்கப்படுகின்றனர்

(சிங்கப்பூர்)

சிறைச்சாலை வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்வதற்கும் கைதிகளைக் கையாள்வதற்கும் புதிய முறை ஒன்றை சிங்கப்பூர் சிறைத் துறை கடந்த நவம்பர் மாதம் முதல் அறிமுகப் படுத்தி இருக்கிறது.

சிங்கப்பூர்சிறைகளில் இருக்கும் 11, 000 கைதிகளை கண்காணிக்கவென 9 மில்லியன் செலவில் இப்புதிய முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

கைதிகளின் விபரங்கள் கோப்புகளில் பாதுகாக்கப் பட்டு வந்த பழைய முறை மாற்றம் பெற்று கைதிகளின் புகைப்படங்களையும்உடமைகளையும் மின்னியக்க முறையில் பதிவு செய்து கொள்கின்ற புதிய முறை அறிமுகப் படுத்தப்பட்ட பின் தமது வேலைப்பளு மிகவும் குறைந்திருப்பதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கணனி முறையால் சிறைச்சாலையின் சகல பகுதிக் கைதிகளின் நடமாட்டத்தையும் நன்கு புரிந்து அதற்கேற்ப நடவடிக்கைகளை மாற்றியமைக்க இயலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-09)

# அணு பரிசோதனை தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடுமோ?

(புதுடில்லி)

அணுவாயுத பரிசோதனை தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக உள்நாட்டில் கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சித்துவருவதாக இந்தியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டோஸ் டோக்கியோவில் ஜப்பானிய அமைச்சரவையின் பிரதம செயலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டால் இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகளும் இதன்மூலம் நன்மையடையும் என்று கூறிய ஜப்பானிய அமைச்சரவைச் செயலாளர் அதற்கான இந்தியா மீதான பொருளாதார ஒத்துழைப்பை மீண்டும் வழங்க ஜப்பான் முன்வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு இந்தியா அணுவாயுதப் பரிசோதனை நடத்திய பின்னர் ஜப்பான் இந்தியாவிற்கான பொருளாதார உதவிகளை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-14)

# போதைவஸ்து பாவனைக்கு எதிராக தாய்லாந்தில் -சிறுவர்களின் மாநாடு

(தாய்லாந்து)

உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் தாய்லாந்தில் இவ்வாரம் சிறுவர் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தமாநாட்டில் சிறுவர் மத்தியில் அதிகரித்து வரும் போதை வஸ்து துஷ்பிரயோகம் பற்றியே முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை இதில் கலந்து கொள்வதற்காக 32 நாடுகளைச் சேர்ந்த 40 சிறுவர்கள் பாங்கொக் வந்துள்ளனர்.

உலகிலுள்ள 210 கோடி சிறுவர்களின் அவல நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் நடைபெறும் இம் மாநாட்டில் பல்வேறு நாடுகளின்அரசாங்கம் மீதும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் மீதும் இது தொடர்பான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தல் மேற்கொள்ளும் தீர்மானங்களை நிறைவேற்றப் போவதாகவும் மாநாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அண்மைக் கால ஆய்வுகளின்படி தாய்லாந்தில் உள்ள 2 கோடி இளைஞர்களில் 5 லட்சம் பேர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

(க-14)

# புதுடில்லியில் தீ விபத்து 6 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி

புதுடில்லியில் ஓர் பகுதியில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 2 பெண்கள் 6 குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் வரையில் இறந்துள்ளனர் என நேரிற் கண்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்னணு பொருள் விற்கும் கடை ஒன்றில் நேற்று அதிகாலை தீவிபத்து ஏற்பட்டதாகவும் அந்தத் தீ அருகில் இருந்த குடியிருப்புக்கு பரவியதிலேயே இந்த இறப்பு நேரிட்டதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை குடியிருப்புக்குச் செல்லும் பாதையின் கதவு பூட்டப்பட்டிருந்ததால் தான் மக்கள் வெளியேற முடியாமல் தீயிற்குள் சிக்கி இறந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஆசிரியர் பயிற்சிக்கான விண்ணப்பம் மிக விரைவில் கோரப்படும்

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை மேலும் ஒரு பயிற்சிக்காலத்திற்கு நீடிப்பதற்கான அனுமதியை கல்வி, உயர்கல்வி அமைச்சர் வழங்கியுள்ளதைத் தொடர்ந்து கலாசாலைக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் மிக விரைவில் கோரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ் மாவட்டப் பயிற்றப்படாத ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெ. கோகுலவாசன் கல்வி உயர்கல்வி அமைச்சின் கல்வி நிர்வாகம் பணிப்பாளர் ஜே. ஏ. அறங்கலவின் செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது

01-01-99 இற்கு முன் ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களென்றும் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பயிற்சிக்கே விண்ணப்பிக்க முடியுமெனவும்,

நியமனக் கடிதங்களில் பாடம் குறிக்கப்படாதவர்களுக்கு க. பொ. த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பயிற்சிக்குரிய பாடம் தெரிவு செய்யப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்களின் நன்மை கருதி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை மூடவேண்டாமென யாழ் மாவட்ட பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடமும், கல்வி அமைச்சரிடமும் கோரிக்கை விட்டிருந்ததும் தெரிந்ததே.

(ந)

# ஈ. பி. ஆர். எல். எவ். விலிருந்து முதலமைச்சர் வரதர் விலக்கப்பட்டார்

(வவுனியா)

ஈ. பி. ஆர். எல் எவ் கட்சியின் செயலாநாயகம் சுரேஸ் பிறேமச் சந்திரனால் இடைநிறுத்தம் செய்யப்பட்ட முன்னால் வடக்கு கிழக்குமாகான முதலமைச்சரும் மத்திய குழு உறுப்பினருமான திரு அ. வரதராயப் பெருமாளை கட்சியில் இருந்து நிரந்தரமாக விலக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளதை செயலாளர் நாயகம் திரு சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

பெருமாள் மீதான குற்றச் சா ட்டு மத்திய கமிட்டியின் கூட்டத்தில் பலத்த கண்டனத்திற்கும் உள்ளானது என வும் தெரிவிக்கப்பட்டது

கட்சியின் தேசிய அமைப்பாளர் இரா. துரைறட்ணம் பொறுப்புக்கள் கடமைகளிலிருந்து சுயமாக விலகிக் கொள்கிறேன் என கடிதம் எழுதியிருந்தார் ஆனால் சிலமத்திய குழுஉறுப்பினர்களையும் செயளாளர் நாயகத்தினால்இடைநிறுத்தப்பட்ட திரு பெருமாளையும் சேர்த்து

டிசம்பர் மாதம் 16ந் திகதி கூட்டிய கூட்டம் தொடர்பாக திரு துரைரட்ணத்திடம் விளக்கம் கோருவதெனவும் இந்த கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டது

திரு பெருமாள் மீகு நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இருந்தது இவை விரிவான விவாதத்திற்கு எடுக்கப்பட்டு ஆராயபட்டதாக திரு சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார் கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் கூட்டம் இன்றும் நாளையும் வவுனியாவில் நடத்துவதெனவும் மத்திய குழு தீர்மானித்துள்ளது சுரேஸ் பிறேமச்சந்திரன் தர்மராசா வில்சன் ஏ.ஜெயக்கொடி (சோமு)கே. அருந்தவராசா (ஜேர்மனி) ரி. லிங்கேஸ்வரன் (எ.ஜி.எ) க. சின்னையா (சர்மா) மற்றும் பரீட்சார்த்த உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் அருள்ராஜசேகரன் குமரேஸ் ஆகியோரும் மத்திய குழு கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்.

# காங்கேசன்துறை தடுப்பு முகாமில் 3 பெண் உட்பட 15 பேர் தடுத்துவைப்பு

(ஆணைப்பந்தி)

காங்கேசன் தடுப்பு முகாமில் தற்போது 3 பெண்கள் உட்பட 15 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ந. ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 4ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட கரந்தன் தெற்கு' கரந்தன் நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினம் சிவகுமார் (24 வயது) என்பவர் ஊரெழு முகாம் படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்ப்படுத்தப் பட்டபின் 7ஆம் திகதி காங்கேசன் தடுப்பு முகாமிற்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் மேற்படி முகாமில் தடுத்து வைக்கப்பட்ட எவரும் விசாரணைக்காக அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு அனுப்பப் படவில்லை எனவும். தடுப்பு முகாமில் தங்கியுள்ளவர்கள் பொங்குவதற்காக வடபகுதி பத்திரிகையாளர் சங்கத்தினர் வழங்கிய பொங்கல் பொருட்கள்அவர்களிடம் கையளிக்கப் பட்டதாகவும் தெரிவித்தார்.

(த-28)

# கட்சி மாறும் சட்ட மூலத்திற்கு பெருமளவு எம்.பி.க்கள் ஆதரவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவலை மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் சட்ட மூலத்திற்கு 25 முதல் 30 வரையான ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.க்கள் ஆதரவளிப்பார்களென ஐ.தே.க மாற்றுக்குழு எம்பியும், அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இத்திருத்தச் சட்டமூலம் வெளிவந்ததும் இது குறித்து முடிவெடுக்கப்படுமெனத.வி.கூ. எம்,பி, மாவை சேனாதிராஜா தெரிவித்தார். ஐ-தே கட்சியில் சில முக்கியஸ்தர்கள் இச் சட்ட மூலத்திற்கு ஆதரவளிக்க வுள்ள தாயும் அதைத்தடுக்க ஐ. தே. க. தலைமைத்துவம் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது எதிர்வரும் 18ம் திகதி பாராளுமன்றத்தில் மேற்படி சட்டமூலம் கொண்டுவரப் பட இருப்பது தெரிந்ததே.

# ஓய்வூதியம் வழங்கல்

கொடிகாமம் கிராமிய வங்கியில் ஜனவரிமாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பலதிற உத்தியோகத்தரின் ஓய்வூதியங்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரச சார்பற்ற நிறுவனங்கள். . .

லீவச் சிறுகைத் தொழில் திட்டத்திற்கென சுழற்சி நிதியாகவும் வழங்கவுள்ளது, யாழ் ,மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 1 ஆம் கட்ட ஆய்வுப்பட்டறையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு,கே, சண்முகநாதன் மேறகண்டவாறு கூறினார் இணையத் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடந்த புணரமைப்பு, நிவாரணம், மீள் சமரச நடவடிக்கை பற்றிய ஆய்வுப் பட்டறை நேற்று யாழ், பஸ்ரியன் கேட் போர் கூடத்தில் நடைபெற்றது, அரசாங்க அதிபர் திரு. கே, சண்முகநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, 1987 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இடம்பெயர்வுகள் ஏற்பட்டு வருவதினால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். இந் நாட்டில் அர்த்தமுள்ள சமாதானம் அவசியம் ஏற்படும் போது வெளிநாட்டு நிறுவனங்கள் பெருமளவில் உதவி வழங்கத் தயாராக இருக்கின்றன. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வாழும் இம்மக்களின் தேவைகள்' எதிர்பார்ப்புகள் யாவும் கண்டறியப்பட்டு அதற்கேற்ப திட்டங்கள் தீட்டப்படுவது அவசியமாகும்,

1995ஆம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் 8 லட்சத்து 29 ஆயிரம் மக்கள் தங்கியிருந்தனர் அப்போதுமாவட்டத்தில் நிலவிய அசாதரண சூழ்நிலையில் ஒரு' லட்சத்து 83 ஆயிரம் மக்கள் வெளிநாடு சென்றுள்ளனர். தட்போது மட்டும் யாழ். மாவற்டத்தில் 4லட்சத்து83 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் நாம் எந்த விதமான பாரிய அபிவிருத்தித்திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை எனினும் அடிப்படையான சில அத்திவாரங்களை அமைத்துள்ளோம். எதிர் காலத்தில் பாரிய அளவிலான புனர்வாழ்வு அபிவிருத் திட்டங்களை அமுல் செய்யக்கூடிய வகையில் காத்திரமான திட்டங்களைத் திட்டுவதற்கு இந்த ஆய்வுப் பட்டறை பயன்படும்என நம்புகிறேன்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் உலக வங்கி இத்தகைய ஆய்வுப் பட்டறையை நடாத்தி வருகிறது இந்நிலையில் யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இதனை நல்ல முறையில் பயன் படுத்தித் திட்டங்களைத் தீட்டவேண்டு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநரின் பிரதிநிதியான யாழ். பிரதேச இணைப்பாளர் திரு. ஏ. சி, செபநாயகம் பேசுகையில் கூறியதாவது,

யாழ். மாவட்டத்தில் அரசாங்கத்தினாலும், ஏனைய அமைப்புக்களினாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் பற்றிய அவதானிப்புகள், தடைகள் மற்றும் பின்னடைவுகள் சம்பந்தமாக மாதாந்த அறிக்கை ஒன்றினை ஆளுநருக்கு அனுப்பி வருகிறேன் இம்மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பணிபாராட்டத்தக்கது என்று கூறினார்,

இந்த ஆய்வுப்பட்டறையில் மாவட்ட மட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயி மீனவர்கள், வைத்தியர்கள், சமூகசேவையாளர்கள், பெண்ணின அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியைகள் உட்பட மொத்தம் 40 பேர் பங்கு பற்றினார்கள்,

## சந்திரிகா . . .

அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் பிரகாரம், இத்தேர்தல் சட்டத்திற்கு புறம்பானது என்று அறிவிக்கும் படியும் இம் மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு தயானந்ததிசநாயக்க பதில் தேர்தல் ஆணையாளர் பி.பி தசநாயக்க ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்

வழக்கைத் தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி கே. என் சொக்ஸிக்கு உதவியாக டொனால்ட் பெரேரா ஏ. வி.ரயில்ஸ், மொகைதீன் தயா தெல்பொல பி. விமலச்சந்திரன் ஆகியேரர் ஆஜரானார்கள்.

ஜனாதிபதி தெரிவு பிழையெனக்கூறி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தகது.

## புங்குடுதீவு . . .

கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்ற போதும் அவர் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வாரா என்பது இது வரை தெரியவரவில்லை.

சாரதாம்பாள் கொலை தொடர்பாக விசாரணை செய்வதற்காக உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திருஆர்லிக்ஸ் தலமையில் வந்த சி. ஐ. டியினர் தமது விசாரணையை முடித்கொண்டு கொழும்பு திரும்பியுள்ளனர்.

சாரதாம்பாளின் தம்பி, தந்தை, அயலவர், மற்றும் ஏழு கடற்படையினர் உட்பட பலர் விசாரணைக்குட் படுத்தப் பட்டனர்.

## நாவலர் . . .

விவாதங்களில் வல்லவராகவும் விளங்கினார். இதனால் இவருக்கு நாவலர் என்றும் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் கொண்டிருந்த இலக்கியப் புலமையாலும் ஏனைய திறமையாலும் நடமாடும் பல்கலைக்கழகம் என அழைக்கப்பட்டார். அரசியல் நெளிவு சுழிவுகளுக்கு அப்பாற்பட்டவராக விளங்கிய போதிலும், தமது ஆழ்ந்த புலமையால் தமிழ் நாட்டில் தனக்கென ஒரு தனிஇடத்தைப் பிடித்துக் கொண்டார்

இவரின் மறைவை ஒட்டி தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி அ.இ.அ.தி.மு கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா உட்பட பல தலைவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

## ஆசிரியர் . . .

தெரிவித்தார்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள உயர்தரப் பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கற்பிப்பதற்கு 416 ஆசிரியர்கள் தேவையாகவுள்ள போதிலும் கடந்த வருடம் இதற்கான விண்ணப்பம் கோரப்பட்ட போது விண்ணப்பிக்கப்பட்டவர்களில் தகுதியான எவரும் இல்லை யெனவும் இதனால் குறித்த தகுதி நிலையை விடுத்து இரண்டாம் தகுதி நிலையில் 220 ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப் பட்டதாவும் க. சுந்தரம் டிவகலாலா மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரியில் ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் 4.15 முதல் நள்ளிரவு வரையில் 25ற்கும் மேற்பட்ட எறிகனைகள் நகரை அண்மிய பகுதிகளிலும் கச்சாய் றோட் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன

நள்ளிரவு 11.00 மணியளவில் ஸ்ரேசன் றோட்டில் வீழ்ந்த எறிகனையால் வீட்டில் நித்திரையில் இருந்த பூபாலசிங்கம் பஞ்சலிங்கம் (வயது 33) என்பவர் கையில் காயமடைந்து சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுமேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலமாக யாழ் போதனா வைத்தியசாலைக்குஅனுப்பப்பட்டார் மேலும் இவ் எறிகணை வீழ்ந்த பகுதியில் மின்கம்ப மொன்று அருகிருந்த வீட்டின் சன்னல் கண்ணாடிகளும் சேதத்திற்கு உள்ளாகி உள்ளன

மேலும்தனங்களப்புவீதியில் உள்ள பாழடைந்தகட்டடம் அருகே வீழ்ந்த எறிகணையால் அங்கிருந்த கிணறு சேதமடைந்ததுடன் ஆடு ஒன்று குடல் சிதறிய நிலையில் உயிக்காகபோராடி கொண்டு இருந்தது

சவகச்சேரி நகரப்பகுதி கடைகள் நேற்றைய தினம் நேர காலத்தில் பூட்டப்பட்டதோடு இன்றுஓரளவு கடை திறக்கப்பட்டிருப்பினும் மக்களின்நடமாட்டம்மிகக்குறவா காணப்பட்டது

# நிவாரணம் வழங்கல்

தென்மராட்சி கிழக்கு ப. நோ.கூ.ச. கிளைகளில் ஜனவரி மாத நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் நிவாரண அட்டைகளுக்கு தலா மூன்று லீற்றர் மண்ணெண்ணை விநியோகிக்கப்படுகின்றது. [க-28]

## இன்று...

படும் சாந்த என்பவரை கண்ட குமார் பொன்னம்பலத்தின் வீட்டுப்பணியாளர்கள் இருவர் இந்த விசாரணையின்போது சாட்சியமளிக்கவுள்ளனர்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆம் 13 திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.